கள்ளக்குறிச்சி பேரூராட்சி

*518 வினா—திரு. சின்னசேலம் மா. சுப்ரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது குறித்து ஒரு செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதற்கு முன்னால் அந்தப் பேரூராட்சிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்களில் யார் யார் நகராட்சியில் பணிபுரிய இசைகிறார்கள் என்பது கேட்டு அறியப்படுமா ? அவ்வாறு கள்ளக்குறிச்சியில் எந்தெந்த ஆசிரியர்கள் பணிபுரிய விரும்பு கிறார்கள் என்று தெரிந்த பிறகு நகராட்சியாக மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நகராட்சியாக மாற்றுவது என்பது இன்னும் முடிந்த முடிவல்ல. அது பரிசீலனையில்தான் இருக்கிறது. அது ஒன்றியம் தரக்கூடிய ஒத்துழைப்பு, பேரூராட்சி தரக்கூடிய ஒத்துழைப்பு, இவை களினுடைய தீர்மானங்கள் ஆகிய இவற்றை ஒட்டித்தான் அரசு முடிவு செய்யும்.

மாநகர வளர்ச்சித் திட்டம்

*519 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சென்னை மாநகரப் பகுதியின் பெருந்திட்டம் விரிவான வளர்ச்சித் திட்டங்களாக பல பகுதியாக பிரிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

(இ) இதில் இதுவரை அரசு அங்கீகாரம் அளித்துள்ள வையின் எண்ணிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.